28th August 1961]

Sri S. M. ANNAMALAI : வட ஆற்காடு மாவட்டம் மிகவும் பிற்போக்கான மாவட்டம். கைத்தொழில் முன்னேற்றத்திலும் பின் அடைந்துள்ள மாவட்டம். ஏன் சர்க்கார் எல்லா தாலுகா நகரங்களிலும் இந்த மாதிரி பேட்டைகளை ஆரம்பிக்க முன் வரக் கூடாது? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது எல்லா தாலுகாக்களிலும் ஆரம்பிக்கும் திட்டம் இருக்கிறதா?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் கேள்விக்குத் தானே பதில் சொல்லிவிட்டார். பிற்போக்கான தாலுகா என்று சொன்னார். பிற்போக்கான இடத்தில் தொழில் பேட்டை வருவது கஷ்டம். ஏதோ சர்க்கார் தொழிற்சாலை வைக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்றால் தொழிற்சாலைகளை வைக்க கட்டிடம் கட்டிக் கொடுக்கிறோம். எஸ்டேட் ஏற்படுத்தினால் தொழிற்சாலைகளை வைக்க யாராவது முன் வரவேண்டும். இல்லாவிட்டால் கட்டப்பட்ட கட்டிடங்கள் பாழாக நின்றுகொண்டிருக்கும். ஆகையால்தான் இரண்டு எஸ்டேட்டுக்கு மேல் வசதியில்லை என்று சர்க்கார் நினைக்கிறது.

Work-sheds

* 1449 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the scheme of providing work-sheds and developed plots for Industrial purposes; and

(*b*) the number of centres to be selected for each district during the Third Plan Period?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have sanctioned the establishment of four worksheds in the Tiruchirappalli district for synthetic stone workers and four work-sheds in the Tirunelveli district for carpentry and blacksmithy workers. It is also proposed to construct a number of work-sheds in the city for the iron and steel fabricators in the Walltax Road area. Another scheme has been sanctioned for the acquisition of 354 acres at Guindy and 330 acres at Avadi-Ambattur for giving plots on lease or on sale to industrialists for construction of buildings according to their requirements. These plots will be handed over after improving them by providing necessary facilities like electricity, roads, water-supply, etc.

Sri M. KALYANASUNDARAM : ஸார், பெரும்பாலும் சென்னை நகரத்தைச்சுற்றி ஓரளவுக்கு தொழிற்சாலைகள் நடத்த வசதிகள் செய்துகொடுக்கப்படுகிறது. பீடித் தொழில் சட்டத்தைக் கூட அமுல் நடத்த முதலாளிகள் மறுக்கிறார்கள். பீடித் தொழில் அதிகமாக இருக்கக்கூடிய திருச்சி, வேலூர் போன்ற இடங்களில் பீடித் தொழிற்சாலைகளை அமைக்க கட்டிடங்கள் கட்டிக்கொள்ள இடம் கொடுக்கலாம். அதையும் இந்தக் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுமா?

[28th August 1961

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த வசதிகள் கொடுப்பதிலே கூட ப்ரையாரிட்டீஸ் உண்டு. எதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும், எதற்கு இரண்டாவது இடம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இப்போது முதலிடம் கொடுக்க வேண்டியது என்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸுக்கு. ஏனென்றால் இப்போது பெரிய பெரிய தொழிற்சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆன்ஸிலரி பார்ட்ஸ், காம்போனென்ட்ஸ், செய்யக்கூடிய தொழிற்சாலைகள், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் வர வேண்டும். அவைகள் வரவேண்டியதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பீடித் தொழிலுக்கு அவ்வளவு முதலிடம் கொடுக்க வேண்டியதில்லை.

SRI R. SRINIVASA IYER : May I know whether these two areas would be handed over, after development of electricity and water-supply, in such a way that large plots would be given for industrialists to construct work-sheds, or individual work-sheds for individual workers?

THE HON. SRI R. VENKATARAMAN : There are two schemes of industrial estates. One is the pattern in United Kingdom where factories are built, amenities are provided, services are given and then sheds are allotted on hire or rental basis. Then there is another type of industrial estate which is prevalent largely in the United States where large areas are acquired, amenities like electricity, water-supply, drainage, etc., are provided. Then the land is given on sale or on hire-purchase to those who want to start selected industries approved by Government. There they will buy lands either on cash payment or on hire-purchase and they will be told to start industries according to the pattern given by the Government.

Agricultural Bank (Godown)

* 1450 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government poramboke land has been requested to be assigned for the construction of the Agricultural Bank Godown in Thiruthangal village, Ramanathapuram district; and

(*b*) if so, why has it not been assigned so far?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) The site is required for Government purposes and is not available for alienation to the Agricultural Bank at Thiruthangal.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த பாங்க் கட்டிடத்திற்குக் கேட்டிருக்கக் கூடிய இந்த நிலத்தை அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. தன் சொந்த உபயோகத்திற்குக் கேட்டதால் தான் பாங்கிற்குக் கொடுக்காமல் தடைபட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிற காரணம் உண்மைதானா?